செ.வெ.எண்: 28/ஏப்ரல் நாள்: 21.04.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## தேர்தல் பறக்கும்படை மற்றும் நிலை கண்காணிப்புக் குழுவினர் ஆகியோரின் கண்காணிப்பு பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம்

## மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (21.04.2016) மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், சட்டமன்ற பொதுத்தேர்தல் 2016-இல் தேர்தல் நடத்தை விதிமுறை மீறல்கள் மற்றும் முறைகேடுகளை கண்காணித்திடும் விதமாக கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வரும் தேர்தல் பறக்கும்படை மற்றும் நிலை கண்காணிப்புக் குழுவினர் ஆகியோரின் கண்காணிப்பு பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

இராமநாதபுரம் மாவட்டத்தில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் நடைமுறைப்படுத்தப்பட்ட தினம் முதல் தேர்தல் நடத்தை விதிமுறை மீறல்கள் மற்றும் முறைகேடுகளை கண்காணித்திடும் விதமாக தேர்தல் பறக்கும்படை மற்றும் நிலை கண்காணிப்புக் குழுவினர் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். மாவட்டத்திலுள்ள நான்கு சட்டமன்றத் தொகுதிகளிலும் தலா 3 பறக்கும்படை வாகனங்கள் வீதம் 12 வாகனங்களும் தலா 1 நிலைக் கண்காணிப்புக்குழு வாகனம் வீதம் 4 வாகனங்களும் ஆக மொத்தம் 16 வாகனங்கள் ஜி.பி.எஸ் கருவி பொருத்தப்பட்டு 24 மணி நேரமும் சுழற்சி முறையில் தொடர்ந்து தேர்தல் கண்காணிப்பு பணியில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

நிலை கண்காணிப்பு குழுவினர் மூலம் பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பார்த்திபனூர் சோதனைச் சாவடியில் வாகன சோதனையின் போது சுமார் ரூபாய் 10 இலட்சம் மதிப்பிலான 100 கிலோ கஞ்சா கைப்பற்றப்பட்டு போதைப்பொருள் தடுப்புத் துறையினர் மூலம் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வரும் அலுவலர்கள் தேர்தல் தங்களுக்கு வரும் புகார்கள் மீது காலம் தாழ்த்தாமல் உடனடியாக சம்பந்தப்பட்ட இடத்திற்கு நேரடியாகச் சென்று ஆய்வு செய்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். புகார்களை உடனுக்குடன் அதற்கான பதிவேடுகளில் பதிவு செய்திட வேண்டும். கண்காணிப்பு வாகனங்களை தணிக்கை செய்யும் போது பொதுமக்கள் பாதிக்காத வகையில் தேர்தல் நோக்கத்துடன் கொண்டு செல்லப்படும் பணத்தினை மட்டுமே பறிமுதல் செய்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். தேர்தல் வாக்குப்பதிவு நாள் நெருங்குவதைத் தொடர்ந்து தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் கண்காணிப்பு பணிகளில் கூடுதல் கவனம் செலுத்தி 24 மணி நேரமும் எவ்வித பாரபட்சமுமின்றி தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.எம்.அலி அக்பர், பரமக்குடி சட்டமன்ற தொகுதிக்கான தேர்தல் நடத்தும் அலுவலர் (சார் ஆட்சியர்) டாக்டர்.ஜி.எஸ்.சமீரன்,இ.ஆ.ப., இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிக்கான தேர்தல் நடத்தும் அலுவலர் (வருவாய் கோட்டாட்சியர்) திரு.ராம்பிரதீபன் , திருவாடானை சட்டமன்ற தொகுதிக்கான தேர்தல் நடத்தும் அலுவலர் (மாவட்ட வழங்கல் அலுவலர்) திரு.ராஜசேகரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) திருமதி.சாந்தா உட்பட தேர்தல் பறக்கும்படை மற்றும் நிலை கண்காணிப்பு குழுக்களைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**
**புகைப்படம் : மின்னஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது.**